TOTAL PAGES: 2

**22LAT404N / 22LAT404 / 18LAT04**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA & BSc DEGREE EXAMINATION DECEMBER 2025**
(Fourth Semester)

Common to – **BA & BSc PROGRAMMES**

**TAMIL - IV**

Time: Three Hours Maximum: 75 Marks

பகுதி - அ

ஓரிரு வார்த்தைகளில் விடையளி : (5 × 1 = 5)

1. 'யானையைக் கட்டிவைத்திருக்கும் புரி தேய்ந்துபோன கயிறு போல' என்று நற்றிணை யாரைக் குறிக்கிறது?
2. வினைப்பயனை உணர்த்தும் நற்றிணைப் பாடல் எத்திணையைச் சார்ந்தது?
3. குறிஞ்சிப்பாட்டு உணர்த்தும் விழுமியத்தினை எழுதுக.
4. 'முழங்கு முந்நீர் முழுவதும்' எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
5. 'மாரி - பொருள் தருக.

பகுதி - ஆ

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க : (8 × 5 = 40)

6. அ) ஔவையார் பாடிய 'குறுந்தொகை' - குறிஞ்சித்திணைப் பாடலை விவரிக்க.

(அல்லது)

ஆ) வீரத்தாய் தன் மகன் பற்றிக் கூறும் செய்திகளைப் புறநானூற்றுப் பாடல் வழி நின்று விளக்குக.

7. அ) தலைவி தன் காதலை ஏற்றுக் கொண்டதைத் தோழி வாய்க் கேட்ட தலைவனின் மகிழ்வினை ஆராய்க.

(அல்லது)

ஆ) குடபுலவியனாரின் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் செய்திகளை எழுதுக.

8. அ) வெள்ளப் பெருக்கைக் கண்ட மக்களின் செயல்களை பரிபாடல் வழி விளக்குக.

(அல்லது)

ஆ) 'மறுதரவுப் பத்து' - பாலைத்திணைப் பாடல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

9. அ) மனித நேயம் உணர்த்தும் அகநானூற்று முல்லைத்திணைப் பாடலின் பொருளை விளக்குக.

(அல்லது)

ஆ) இரவுக்குறிக்கண் தலைமகளைப் புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிய குறிஞ்சித்திணைப் பாடலை விவரிக்க.

**Cont...**

10. அ) குறுந்தொகையில் இல்லறச் சிறப்பை உணர்த்தும் பாடல் கருத்துகளை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) சுனையில் நீராடும் போது நடந்த நிகழ்வினைக் குறிஞ்சிப் பாடல் வழி தெளிவுபடுத்துக.

11. அ) தொன்மைச் சிறப்பைக் கூறும் அகநானூற்று நெய்தல் திணைப் பாடலின் பொருளை எடுத்தியம்புக.

(அல்லது)

ஆ) வையைப் புனலின் வனப்பினை விவரிக்க.

12. அ) ஐந்திணைக்குரிய கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

(அல்லது)

ஆ) நும் பாடப் பகுதியில் அமைந்துள்ள புறத்திணைகளைப் பட்டியலிட்டு விளக்கி எழுதுக.

13. அ) இறைச்சியின் இலக்கணம் தந்து சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) மெய்ப்பாடு என்பது யாது? அதன் வகைகளை விவரிக்க.

<u>பகுதி - இ</u>

அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடையளிக்க : (3 × 10 = 30)

14. அ) சோம. வள்ளியப்பனின் உளவியல் ரீதியான அணுகுமுறைகளை விரிவாக எழுதுக.

(அல்லது)

ஆ) உணர்வு மேலாண்மை குறித்து 'இட்லியாக இருங்கள்' நூல் கூறும் செய்திகளைத் தொகுத்துக் கூறுக.

15. அ) அம்பேத்கரின் கருத்துகளை மந்திரச் சொல் நூல் வழி விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) 'இழப்பதற்கு எதுவும் இல்லை' என்னும் கார்ல் மார்க்ஸ் தத்துவத்தினை விளக்கியுரைக்க.

16. அ) முச்சங்கங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலவர்களின் பங்களிப்பினை மதிப்பிடுக.

Z-Z-Z END